**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044314

1. District மாவட்டம்: நாமக்கல் PS காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு நாமக்கல் Year ஆண்டு: 2021 FIR No.: மு.த.அ. எண்: 06/AC/2021 Date: நாள்: 01.11.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the Prevention of Corruption Act, 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 28.10.2021 - சுமார் 16.00 மணி 2) 29.10.2021 - சுமார் 09.00 மணி

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.11.2021 Time : நேரம் 07.45 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. IV 01.11.2021. Time : நேரம் 08.45 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தன்னிலே தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. மேற்கே.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. பூவிழிராஜா (b) Father's/~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் துரைசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 31 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் மேலாளர், ராமராஜ்யம் பேர்வெல் (g) Address : முகவரி 17-B/5, ஜீவா நகர், வெள்ளாளப்பட்டி, சூரியம்பாளையம், திருச்செங்கோடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பரமேஸ்வரன், வருவாய் ஆய்வாளர், எலச்சிபாளையம் பிர்கா, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved: —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது :

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the investigation / Refused investigation / transferred to PS ……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

1.11.21

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.11.2021 at 09.30 மணி.

Name: பெயர் [illegible],
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ………
உ.த.க.பிரிவு.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/AC/2021 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 01.11.2021-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 07.45 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, சூரியாம்பாளையம், 17-B/5, ஜீவா நகர் என்ற முகவரியில் வசித்து வரும் துரைசாமி என்பவரின் மகன் திரு.D.பூவிழிராஜா என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் D. பூவிழிராஜா, த/பெ. துரைசாமி, 17-B/5, ஜீவா நகர், வெள்ளாளபட்டி, சூரியாம்பாளையம், திருச்செங்கோடு. பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல். ஐயா, நான் திருச்செங்கோடு வெள்ளாளபட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் திருச்செங்கோடு செந்தில்ராஜா அவர்களுக்கு சொந்தமான ராமஜெயம் போர்வெல்ஸ் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என் ஓனர் செந்தில்ராஜா அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட நிலம் சுமார் 3 ஏக்கர் எலச்சிபாளையம், கொன்னையார் கிராமம் சர்வே எண்.198-ல் உள்ளது. அந்த நிலம் மேடு பள்ளமாகவும் சில இடங்களில் பாறைகளும் இருக்கின்றது. ஆகையால் அதை திருத்தம் செய்து விவசாயத்திற்கு உகந்ததாக மாற்ற எனது ஓனர் முடிவு செய்து அந்த பணிகளை என்னை பார்த்துக்கொள்ள சொன்னார். மேடு பள்ளங்களை நிறவும்போது பாறைகள் இருப்பின் அதை வெடிவைத்து அகற்றிக்கொள்ள அனுமதி கேட்டு கடந்த சுமார் 1½ மாதங்களுக்கு முன்பு ஒரு மனுவை எழுதி எனது ஓனர் கையெழுத்து போட்டுக் கொடுத்தார், அதை நான் எடுத்துச் சென்று திருச்செங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். அந்த மனுவை அலுவலகத்தில் இருந்த அலுவலர் ஒருவர் பெற்றுக் கொண்டு, வி.ஏ.ஓ., ஆர்.ஐ. வந்து பார்ப்பாங்க அதற்கு பின் உத்தரவு கிடைக்கும் என்று சொன்னார். அதன்பின் 25.10.2021 தேதியன்று கூட்டுப்பட்டாவில் இருந்து தனிப்பட்டா பெற விண்ணப்பித்தோம். அதோடு நிலத்தினை திருத்தம் செய்யும்

பணியையும் செய்ய ஆரம்பித்திருந்தோம். கடந்த 28.10.2021 தேதியன்று காலை 12.30 மணியளவில் கொன்னையார் வி.ஏ.ஓ திரு.சிவலிங்கம் மற்றும் சர்வேயர் ஆகியோர் தனிப்பட்டா கேட்ட மனு சமந்தமாக நிலத்தை அளந்து கொண்டிருந்தனர். மதியம் சுமார் 1½ மணியளவில் அந்த பகுதி ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அங்கு வந்தார். வி.ஏ.ஓ. என்னை அவரிடம் இவர்தான் மேனேஜர் என்று அறிமுகம் செய்து வைத்தார். ஆர்.ஐ. என்னிடம் மண் அள்ளுவதற்கு யாரிடம் அனுமதி வாங்கினீர்கள் என்று கேட்டார். நான் மண் அள்ள அனுமதி வாங்க வேண்டும் என்று தெரியாது, 1½ மாதத்திற்கு முன்பே தாசில்தார் அலுவலகத்தில் வெடிவைத்து பாறையை அகற்ற அனுமதி கேட்டு மனு கொடுத்துள்ளோம், இதுவரை வெடி எதுவும் வைத்து வேலை செய்யவில்லை என்று சொன்னேன். மேலும் ஒரு இடத்தில் உள்ள மண்ணை அள்ளிக் கொண்டுபோய் இதே நிலத்தில் பள்ளமாக உள்ள இடத்தில்தான் கொட்டுகிறோம் என்று சொன்னேன். அதற்கு ஆர்.ஐ. அவர்கள் தாசில்தாரை வந்து பாருங்கள். உங்க ஓனரை தாசில்தார் அலுவலகம் வரச்சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். வி.ஏ.ஓ.வும், சர்வேயரும் பாதி நிலம் அளந்ததோடு நிறுத்திவிட்டு, மீண்டும் ஒருநாள் அளந்துகொள்ளலாம் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். எங்க ஓனர் செந்தில்ராஜா அப்போதுதான் சாப்பிடச்சென்றார். நான் இத்தகவலை எனது ஓனருக்கு போன் செய்து சொன்னேன். அவர் தாசில்தார் அலுவலகத்திற்கு மாலை 3 மணியவில் சென்று ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அவர்களை சந்தித்து விபரம் சொன்னபோது, ஆர்.ஐ. அவர்கள் நீங்க போயிட்டு உங்க மேனேஜரை வரச்சொல்லுங்க என்று சொல்லியுள்ளார். எங்க ஓனர் தாசில்தாரை பார்த்துவிட்டு போகிறேன் என்று சொன்னதற்கு, அதெல்லாம் வேண்டாம், நீங்க போயிட்டு உங்க மேனேஜரை வரச்சொல்லுங்க என்று சொல்லியுள்ளார். அதனால் ஓனர் எனக்கு போன் செய்து தாசில்தார் அலுவலகம் போய் ஆர்.ஐ. அவர்களை பார்க்கச் சொன்னார். நான் 28.10.2021 அன்று சாயங்காலம் 4 மணியளவில் திருச்செங்கோடு தாசில்தார் அலுவலகம் சென்று அங்கிருந்த ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அவர்களை பார்த்தேன். அவர் என்னிடம் ஏற்கனவே நீங்க மனு கொடுத்திருந்தாலும், நான் சொல்ற மாதிரி இன்னொரு மனு புதியதாக எழுதிக்கொடுங்க என்று சொன்னார். அதில் சுமார் 3 அடி அதிகபட்சம் 4 அடிக்கு மிகாமல் மண் எடுத்து நிலத்தை திருத்தம் செய்து கொள்கிறோம் என்று எழுதி, உங்க ஓனரிடம் கையெழுத்து வாங்கிட்டு வாங்க, அந்த மனுவை எடுத்துவரும்போது

இப்போதைக்கு பணம் ரூ.5,000/- கொண்டு வந்து என்னிடம் கொடுத்திடுங்க, அதன்பின் நீங்க வேலை செய்யுங்கள் என்றும் 29.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு தாசில்தார் அலுவலகம் வாங்க உங்க மனுவை அப்படியே எண்டார்ஸ்போட்டு நான் வைத்துக்கொள்கிறேன் என்றும் சொன்னார். நான் ஓனரிடம் சொல்லி மனுவை தயார் செய்து கொண்டு வருவதாக சொல்லிவிட்டேன். அதன்பின் அடுத்தநாள் கம்பெனி வேலை சம்பந்தமாக அவசரமாக வெளியில் செல்லவேண்டியிருந்ததால் 29.10.2021 அன்று காலை 9 மணியளவில் ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அவர்களிடம் போனில் பேசி அன்று தாசில்தார் அலுவலகம் வரமுடியாத விசயம் குறித்து சொன்னபோது, சரி திங்கட்கிழமை நான் சொன்னமாதிரி எல்லாம் கொண்டுவந்திடுங்க மற்றதை நான் பார்த்துக்கிறேன் என்று சொன்னார். எனது ஓனரிடம் இவ்விபரம் சொன்னபோது அவர் லஞ்சம் கொடுக்க வேண்டாம், புகார் கொடுத்துவிடலாம் என்று சொன்னார். நான் ஆர்.ஐ. சொன்னமாதிரி திருச்செங்கோடு வட்டாட்சியர் முகவரியிட்டு மனு எழுதி எனது ஓனரிடம் கையெழுத்து பெற்று வைத்துள்ளேன். இன்று 01.11.2021-ந் தேதி ஆர்.ஐ. லஞ்சமாக கேட்ட ரூ.5,000/- பணம் மற்றும் நிலத்தை திருத்தம் செய்ய அனுமதிகோரும் மனு ஆகியவற்றுடன் ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அவர்களை சந்திக்க உள்ளேன். நிலத்தை திருத்தம் செய்து விவசாயம் செய்ய உகந்ததாக மாற்ற அனுமதி அளிக்க ஏற்பாடு செய்து தர ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் எலச்சிபாளையம் ஆர்.ஐ. திரு.பரமேஸ்வரன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) (D.பூவிழிராஜா) 1.11.2021.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று படித்துப்பார்த்தும், புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 01.11.2021-ஆம் தேதி

காலை 08.45 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/AC/2021, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு அசல் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனிநீதிபதி, நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 7/1/2021
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.